DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 61/2020 |
| Deposition of Witness for | : | P.W. |
| | : | D.W. |
| | : | R.W.1 |
| | : | Court. |
| Name | : | சுப்பிரமணியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.02.2026

**முதல் விசாரணை:**

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டை மண்டலம், திருச்சி கிளையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எதிர்மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்தின் போது அரசு பேருந்தை நான்தான் ஓட்டினேன் என்றால் சரிதான். எந்த ஊரில் இருந்து எந்த ஊர் வழியாக செல்லும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சிவகங்கை முதல் திருச்சிக்கு, தெற்கில் இருந்து வடக்கு நோக்கி எங்கள் அரசு பேருந்து சென்று கொண்டிருந்தபோது நமுணசமுத்திரம் அருகே செட்டியாப்பட்டி நான்குரோட்டில் வலது பக்கமாக திரும்பிய போது விபத்து ஏற்பட்டது. எங்கள் வாகனம் பயணம் செய்த நான்குவழிச் சாலையில் பேருந்து போவதற்கும், எதிரே வாகனம் வருவதற்கும் வழி உள்ளது என்றால் சரிதான். அந்த பாதை ஒருவழி பாதைதான் என்றால் சரிதான். ம.சா.ஆ.5 (மாதிரி வரைபடம்) ல் விபத்து இடம் நான் பயணம் செய்த

வழித்தடத்திலா அல்லது இருசக்கர வாகனம் வந்த வழித்தடத்திலா என்றால் இருசக்கர வாகனம் வந்த வழித்தடம் ஆகும்.

2. பேருந்திற்கு எந்த இடத்தில் அந்த இருசக்கர வாகனம் மோதியது என்றால் இடது பக்கம் முன்படிக்கட்டிற்கு பின்பகுதியில் மோதியது. விபத்து நடந்தவுடன் வாகனம் ஓட்டிய ரமேஷ் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மனுதாரர் விபத்து ஏற்பட்ட இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் அமர்ந்திருந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் இரண்டு நபர்களும் மயக்கமடைந்துவிட்டனர் என்றால் சரிதான். உடனே நாங்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்து வரவழைத்தோம் என்றால் சரிதான், 108 ஆம்புலன்ஸில் அரசு மருத்துவமனைக்கு அவர்களை அழைத்து சென்றனர் என்றால் சரிதான். விபத்து சம்பவத்திற்கு நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தில் இறந்த ரமேஷ்–ன் வாரிசுதாரர்கள் புதுக்கோட்டை நீதிமன்றத்தில் இழப்பீடு வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

3. மேற்குறிப்பிட்ட வழக்கிலும் அரசு போக்குவரத்து கழகம் சார்பாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். புதுக்கோட்டையில் தாக்கல் செய்த இழப்பீட்டு வழக்கில் அரசு போக்குவரத்து கழகத்திற்கு எதிராகவும், மனுதாரருக்கு ஆதரவாகவும் தீர்ப்பாகியுள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து அரசு போக்குவரத்து கழகம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் மேல்முறையீடு செய்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. அந்த மேல்முறையீட்டு வழக்கிலும் அரசு போக்குவரத்து கழகத்திற்கு எதிராகத் தான் தீர்ப்பு வழங்கப்பட்ட விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. விபத்திற்கு காரணம் நான்தான் என்றும், நான் தான் அதிவேகமாவும், அஜாக்கிரதையாவும் அரசு பேருந்தை இயக்கி மேற்படி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அந்த விபத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.